FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2022 மே

Vol. 02 - தொகுதி 05



பிரதமரின் ஆதரவாளர்களினால் கோட்டகோகம தாக்கப்பட்டமை



ஊடகவியலாளர் தர்ஷன ஹந்துங்கொவை குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைத்தமை



வேகதவள ராகுல தேரர் கைது செய்யப்பட்டமை.

ஊடக சுதந்திரம் குறித்து மே மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 35 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மே 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 12 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 19 சம்பவங்கள் ,ஊடக சுயாதீனத்துவம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 03 சம்பவம் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## மே மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. அலரிமாளிகை முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கியிருந்த கூடாரங்களைக் காவல்துறை அதிகாரிகள் அகற்றியமை.
2. "காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்து கொண்டு அரசுக்கு எதிராகக் கருத்து தெரிவித்தார்" என்ற காரணத்தினால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டமை.
3. அலரி மாளிகைக்கு முன்னால் தொடர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாகப் பாதசாரிகளுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் மற்றும் தடைகளை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமை.
4. நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் ஒருமித்த கருத்து எட்டப்படாவிட்டால் அவர்களை ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்குவதை தவிர்க்குமாறு இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்களின் சங்கம் வேண்டியுள்ளது.
5. ஊடகவியலாளர்களுக்கு எதிராகச் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பும் பிரச்சாரம் தொடர்பில் மட்டு ஊடக அமையம் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டமை.
6. பாராளுமன்றம் அருகே போராட்டத்தில் ஈடுபட்ட 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை.

7. அம்பாறை ஊடகவியலாளர் ஷாஹிர் கான் பாரூக் செய்தி அறிக்கைகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தாக்கப்பட்டமை.

8. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின்போது சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுவதனை கண்டித்து UNICEF அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளமை.

9. மே 6, 2022 அன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் அவசர காலநிலை பிரகடனம் மேற்கொள்ளப்பட்டமை.

10. பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாணவர்கள்மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை.

11. ஹர்த்தாலில் பங்குபற்றிய அரச உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு நடவடிக்கை.

12. காலிமுகத்திடல் போராட்டக்களம் காரணமாகப் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதாகக் கோட்டை பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

13. ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்து அவசரகாலச் சட்ட பிரகடனம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டமை.

14. அலரிமாளிகை முன்னால் காணப்பட்ட கூடாரம் மற்றும் போராட்டக்காரர்கள் மீதும் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக்களம், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீதும் அரச ஆதரவு குழுத் தாக்குதல் நடத்தியமை.

15. மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்தைப் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியமை.

16. அலரிமாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள ஆர்ப்பாட்ட பூமி மற்றும் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக்களம், போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் முன்னால் பிரதமர் உட்பட 17 பேருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை உத்தரவு விதித்தமை.

17. முன்னாள் பிரதமர் உட்பட 7 பேருக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு கோரி சட்டத்தரணி ஒருவர் கோட்டை நீதவான் நீதிமன்றில் முறைப்பாடு மேற்கொண்டமை.

18. “கோடாகோகம“ போராட்டத் தளத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு நீதி கோரி இரு அமைப்புக்கள் பொலிஸ் மா அதிபரிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளன.

19. சமூக ஊடகங்களில் கருத்துகளை வெளியிட்டதற்காகத் தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டமை.

20. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நீதித்துறை சுயாதீனத்துவத்திற்கு மேற்கொள்ளப்பட்ட தாக்கம் தொடர்பில் பாராளுமன்றத்தில் வெளிபடுத்தப்பட்டமை.

21. “புதுன்கே ரச்தியாதுவ“ என்ற தலைப்பில் புத்தகத்தை எழுதிய எழுத்தாளர் மற்றும் பதிப்பாளர்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை.

22. நாடாளுமன்ற வளாகத்தில் செய்தி ஊடகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு அவர்களது கைத்தொலைபேசிகள் பறிக்கப்பட்டமை.

23. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள ”ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாயம்” முன்னிலையில் ஆரம்பமாகியமை.

24. உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் பொய்யான புகாரின் காரணமாகச் சுயாதீன ஊடகவியலாளர் புஷ்பா வீரசேகர மற்றும் அவரது கணவர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டமை.

25. முகநூலில் கருத்துக்களை வெளியிட்ட காரணத்தினால் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஒருவர் ஹட்டன் பகுதியில் கைது செய்யப்பட்டமை.

26. மூதூரில் எரிபொருள் வரிசையைப் படம் பிடிக்கும்போது ஊடகவியலாளர் மொஹமட் புஹாரி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை.

27. வாரியபொல எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் ஊடகவியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பத்திரிகையாளர் அசோக சந்திரசேகர மீது தாக்குதல் நடாத்தப்பட்டமை.

28. ஊடகவியலாளர் தர்ஷன ஹந்துங்கொடவிற்கு குற்றவியல் விசாரணை திணைக்களம் அழைப்புவிடுத்தமை.

29. சமூக ஆர்வலர் இந்திக்க கமகே கைது செய்யப்பட்டமை.

30. கொழும்பில் பல வீதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றம் தடை உத்தரவு விதித்தமை.

31. சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா, விசாரணைக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டமை.

32. சமூக ஊடக செயற்பாட்டாளரும் சமூக ஆர்வலருமான ரத்திந்து சேனாரத்ன (ரெட்டா) கைது செய்யப்பட்டமை.

33. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களான மூன்று பிக்குகள் வீரகெட்டிய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டமை.

34. 18 வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் நினைவேந்தல்.

35. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 மே மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 12 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 19 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 03 |
| **மொத்தம்** | **35** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர்விளைவுகளை எதிர்கொள்ளாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 12 சம்பவங்கள் மே மாதத்தில் அறிக்கையிடப்பட்டன. ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளான ஐந்து சம்பவங்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற வளாகத்திற்குள் இரு ஊடகவியலாளர்கள்மீது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கிய சம்பவமும் உள்ளடங்குகின்றன.**

**அட்டவணை 2: 2022 மே மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 12**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 07 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 05 |
| **மொத்தம்** | **12** |

1. **அலரிமாளிகை முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கியிருந்த கூடாரங்களைக் காவல்துறை அதிகாரிகள் அகற்றியமை.**

   பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கோரி அலரிமாளிகை முன்னிலையில் "மயினாகோகம" என்று பெயரிடப்பட்ட போராட்டக்களத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரம் மே மாதம் 01 ஆம் திகதி காலைக் காவல்துறையினரால் உடைத்து பின்னர் அகற்றப்பட்டது. அங்குப் போராட்டக்காரர்கள் இருவர் மீதும் போலீசார் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

   ஆதாரம்: 1. https://www.youtube.com

   2.https://www.gossiplankanews.com

2. **ஊடகவியலாளர்களுக்கு எதிராகச் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பும் பிரச்சாரம் தொடர்பில் மட்டு ஊடக அமையம் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டமை.**

   பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டுவதாகக் குற்றம்சாட்டி அரசாங்கத்திற்கு ஆதரவை அளிக்கும் கட்சிகளின் இரு ஆதரவாளர்களைக் கொண்டு புண்ணியமூர்த்தி சசிகரன் மற்றும் செல்வகுமார் நிலாந்தன் என்ற இரு ஊடகவியலாளர்களுக்கு எதிராக இந்தச் சமூக ஊடக பதிவு இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி கடிதத்தில் மட்டு ஊடக அமையம், மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரியுள்ளது. மேலும், குறித்த ஊடகவியலாளர்கள் பொலிஸ்மா அதிபரிற்கு முறையீடு ஒன்றையும் மேற்கொண்டுள்ளனர்.

   ஆதாரம்: http://www.themorning.lk

3. **அம்பாறை ஊடகவியலாளர் ஷாஹிர் கான் பாரூக் செய்தி அறிக்கைகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தாக்கப்பட்டமை.**

மே 5 ஆம் திகதி இரவு, கிழக்கு அக்கரைப்பற்று நகரின் பாலமுனை பிரதேசத்தில் பொலிஸாருக்கும் குடியிருப்பாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் அறிக்கையிட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சில நபர்களைக் கொண்ட குழுவினர் அவரைத் தாக்கியுள்ளனர் அதன் பின்னர் சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஆதாரம்: https://twitter.com

4. **பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாணவர்கள்மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை.**

அரசாங்கத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்து மே மாதம் 05 ஆம் திகதி மாலை ஆரம்பமான போராட்டம் மறுநாள் மாலைவரை தொடர்ந்ததுடன் காவல்துறையினர் பல சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாக்குதல் நடாத்தினர். வீதியில் பயணித்தவர்களும் இந்தத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டனர். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பேரில், பொலிஸ் மா அதிபர், தாக்குதல்களுக்கு உத்தரவிட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கொடித்துவக்குவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

ஆதாரம்: 1. https://www.youtube.com

2. https://sinhala.srilankamirror.com

5. **ஹர்த்தாலில் பங்குபற்றிய அரச உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு நடவடிக்கை.**

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை இராஜினாமா செய்யுமாறு வற்புறுத்தி நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட மே 6ஆம் திகதி கடமைக்குச் சமூகமளிக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

ஆதாரம்: https://si.rata.lk

6. **அலரிமாளிகை முன்னால் காணப்பட்ட கூடாரம் மற்றும் போராட்டக்காரர்கள் மீதும் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக்களம், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீதும் அரச ஆதரவு குழுத் தாக்குதல் நடத்தியமை.**

பிரதமர் அழைத்த கூட்டத்திற்குப் பிறகு, அலரிமாளிகையிலிருந்து வெளியே வந்த பெருந்தொகையான மக்கள், முதலில் “மயினாகோகம” போராட்டக்காரர்களைத் தாக்கி, கூடாரங்களுக்குத் தீவைத்ததுடன், அதனைத் தொடர்ந்து காலிமுகத்திடல் போராட்டக்காரர்களைத் தாக்கி, போராட்டக்களத்தில் இருந்த கூடாரங்களை அழித்தொழித்தனர். இதன்போது சுமார் 30 போராட்டக்காரர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸார் தாக்குதலைத் தடுக்கவில்லையென அமைச்சர் ரமேஷ் பத்திரன கடந்த மே மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 17 பேரின் பயணத் தடையைக் கோட்டை நீதவான் நீதிமன்றம் கடந்த மே மாதம் 12ஆம் திகதி பிறப்பித்தது. மேலும் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மற்றும் தாக்குதல் தொடர்பான சாட்சியாளர்கள் உட்பட ஏழு பேருக்கும் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டது.

ஆதாரம்: 1. https://www.youtube.com

2. https://girayanews.lk

7. **நாடாளுமன்ற வளாகத்தில் செய்தி ஊடக பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு அவர்களது கைத்தொலைபேசிகள் பறிக்கப்பட்டமை.**

மே 17ஆம் திகதி கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி அறிக்கையிடும் பணியில் ஈடுபட்டிருந்த சிரச சுசுன் சமரவீர (சிரச) மற்றும் பிரகீத் பெரேரா (சுவர்ணவாஹினி) என்ற இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினரான இந்திக அனுருத்த மற்றும் டீ வீரசிங்க இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் அவர்களது கையடக்கத் தொலைபேசியையும் பறிமுதல் செய்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் சபாநாயகர் மற்றும் வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். சுதந்திர ஊடக இயக்கம் இந்தச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஆதாரம்: https://www.youtube.com

8. **உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் பொய்யான புகாரின் காரணமாகச் சுயாதீன ஊடகவியலாளர் புஷ்பா வீரசேகர மற்றும் அவரது கணவர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டமை.**

அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தை வழிநடாத்தி குறித்த உள்ளூர் அரசியல்வாதியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்த முயற்சித்ததாகக் கூறி முறைப்பாடு செய்ததை தொடர்ந்து வாரியபொல பொலிஸாரால் மே 16ஆம் திகதி குறித்த ஊடகவியலாளருக்கு விசாரணைக்காக அழைப்பு விடுத்தது. இது தொடர்பில் நீண்ட நேரம் கருத்து தெரிவித்த ஊடகவியலாளர், இது முற்றிலும் பொய்யான முறைப்பாடு எனக் குறிப்பிடுகின்றார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

9. **மூதூரில் எரிபொருள் வரிசையைப் படம் பிடிக்கும்போது ஊடகவியலாளர் மொஹமட் புஹாரி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை.**

மூதூர் சிரச மற்றும் சக்தி டி.வி பிராந்திய ஊடகவியலாளர் மொஹமட் புஹாரி கடந்த மே மாதம் 21 ஆம் திகதி இரவுத் தாக்குதலுக்கு உள்ளாகி மூதூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். எரிபொருள் வரிசையில் நின்றிருந்த ஒரு குழுவினர் அவரைக் கை, கால்கள் மற்றும் தலைக்கவசத்தை கொண்டு தாக்கியுள்ளனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://mawbima.lk

10. **வாரியபொல எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் ஊடகவியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பத்திரிகையாளர் அசோக சந்திரசேகர மீது தாக்குதல் நடாத்தப்பட்டமை.**

மே மாதம் 23 ஆம் திகதி குருநாகல் அனுராதபுரம் வீதியில் உள்ள மினுவன்கெட சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெரிய கேன்களில் எரிபொருள் நிரப்பும் சம்பவத்தைப் கையடக்கத் தொலைபேசிமூலம் படம்பிடித்துக் கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. கண் மற்றும் முதுகுத்தண்டில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் மருத்துவ ஊர்திமூலம் நிக்கவெரட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இது தொடர்பில் வாரியபொல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://si.rata.lk

11. **ஊடகவியலாளர் தர்ஷன ஹந்துங்கொடவிற்கு குற்றவியல் விசாரணை திணைக்களம் அழைப்புவிடுத்தமை.**

எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களம் முன்னிலையில் ஆஜராகுமாறு அவருக்குத் தொலைபேசி அழைப்பின் மூலம் தகவல் கிடைக்கப்பெற்றதுடன், முறையான அழைப்பாணை விடுக்கப்படாத காரணத்தினால் அவரின் சட்டத்தரணிகள் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு முன் ஆஜாராகியதுடன் அதன்போது எதிர்காலத்தில் முறையான அழைப்பாணை விடுப்பதாகக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தககதாகும். பின்னர் அவருக்கு 31ம் திகதி கணினி குற்றப்பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சமூகவலைத்தளங்கள் மூலம் மக்களைத் தூண்டிவிடுவதாகப் பொலிஸ் மா அதிபருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பேரில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆதாரம்: 1. https://theleader.lk 2. https://www.youtube.com

12. **சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா, விசாரணைக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டமை.**

கடந்த மே மாதம் 9ஆம் திகதி கோத்தா கோகம மீதான தாக்குதலுக்குக் கைதிகள் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுவதாக வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ஆணைக்குழுவில் அங்கம் வகிக்காத ஜனாதிபதி சட்டத்தரணியும் இந்த விசாரணையில் ஈடுபட்டது ஏன் என்பது தொடர்பில் விளக்கமளிக்குமாறும் இது மனித உரிமை ஆணைக்குழு அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட செயல் என்றும் சட்டத்தரணி சேனக பெரேரா ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம்மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆதாரம்: https://sinhala.srilankabrief.org

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**மே மாதத்தில், ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவித் முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 19 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இராஜினாமா செய்ய நிர்ப்பந்தித்த போராட்டங்கள் தொடர்பானவை. மே 9 ஆம் திகதி வன்முறையில் ஈடுபட்ட குற்றவாளிகள் என்று பெயரிட்டு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் காவல்துறை ஒடுக்க முயல்கிறது என்பது அவதானிப்புகளிலிருந்து தெளிவாகிறது.**

**அட்டவணை 03 – 2022 மே : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் – 19 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 16 |
| நீதித்துறையின் பக்கச்சார்ப்பற்ற தன்மை | 01 |
| ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கு | 02 |
| **மொத்தம்** | **19** |

1. **“காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்து கொண்டு அரசுக்கு எதிராகக் கருத்து தெரிவித்தார்“ என்ற காரணத்தினால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டமை.**

சமன் குமார ரத்னதிலக என்ற இளைஞன் கடந்த மே மாதம் முதலாம் திகதி யக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவரைத் தாக்கியும் உள்ளனர். பின்னர் வீட்டில் கஞ்சா பயிரிட்டதாகப் பொய்யான குற்றச்சாட்டின் பேரில் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆதாரம்: https://www.facebook.com

2. **அலரி மாளிகைக்கு முன்னால் தொடர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாகப் பாதசாரிகளுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் மற்றும் தடைகளை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமை.**

கொள்ளுப்பிட்டி காவல்துறையினரால் மே 02 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் பெறப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் கடந்த மே மாதம் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியதுடன் அது தொடர்பில் மே மாதம் 09 ஆம் திகதி அறிக்கையிடுமாறு காவல்துறை பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து, காவல்துறையினரால்

நடைப்பாதையில் நிறுத்திவைக்கப்பட்ட பஸ் வண்டிகள் அகற்றப்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கூடாரங்களையும் அகற்றிக்கொண்டனர். பாதசாரிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் போராட்டம் நடத்த எந்தத் தடையும் இல்லை என்று குறித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://sinhala.asianmirror.lk

3. **பாராளுமன்றம் அருகே போராட்டத்தில் ஈடுபட்ட 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை.**

கடந்த மே மாதம் 4 ஆம் திகதி சபாநாயகரிடம் கடிதம் ஒன்றை கையளித்து பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போதே பொலிஸார் இவர்களைக் கைது செய்து கடுவெல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவாக ஏராளமான வழக்கறிஞர்கள் ஆஜராகினர். இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான பொதுமக்களின் உரிமை மதிக்கப்பட வேண்டும் மற்றும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஆதாரம்: 1. https://www.bbc.com
2. https://www.newswire.lk

4. **ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்து அவசரகாலச் சட்ட பிரகடனம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டமை.**

அவசரகால சட்ட பிரகடனம் தொடர்பில் ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானம் சம்பந்தமாக அறிக்கையிடுமாறு கோரி ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் பொலிஸ்மா அதிபர் சீ.டீ விக்ரமரத்ன போன்ற அதிகாரிகளை மே மாதம் 09 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவசரகாலச் சட்டத்தின்போது கூட, மக்கள் ஒன்றுகூடும் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் தடைபடக் கூடாது என ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

ஆதாரம்: http://nethnews.lk

5. **மே 6, 2022 அன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் அவசர காலநிலை பிரகடனம் மேற்கொள்ளப்பட்டமை.**

மக்களைப் பாதுகாக்கவும் சமூக ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசு அறிக்கை வெளியிட்டபோதிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதற்கும், தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக் காவலில் வைப்பதற்கும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது எனச் சட்டத்தரணிகள் சங்கம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: https://www.bbc.com

6. **காலிமுகத்திடல் போராட்டக்களம் காரணமாகப் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதாகக் கோட்டை பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.**

காலிமுகத்திடல் பகுதியினால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாகக் கூறி கோட்டை காவல்நிலைய பொறுப்பதிகாரி ஊடாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் 15 பக்கங்களைக் கொண்ட நீண்ட அறிக்கையை வழக்கு இலக்கம் 21990 இன் கீழ் மே மாதம் 06 ஆம் திகதி புதுக்கடை பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு மே 10 மற்றும் 12 ஆம் திகதிகளில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜுன் 13 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

ஆதாரம்: 1. https://www.youtube.com
2. https://www.a5news.lk

7. **அலரிமாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள ஆர்ப்பாட்ட பூமி மற்றும் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக்களம், போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் முன்னாள் பிரதமர் உட்பட 17 பேருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை உத்தரவு விதித்தமை.**

மே 12 ஆம் திகதி அன்று கோட்டை நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மற்றும் சாட்சியாளர்களான, காயமடைந்த ஏழு ஆர்ப்பட்டக்காரர்களுக்கும் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டது.

ஆதாரம்: https://www.newsfirst.lk

8. **முன்னாள் பிரதமர் உட்பட 7 பேருக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு கோரி சட்டத்தரணி ஒருவர் கோட்டை நீதவான் நீதிமன்றில் முறைப்பாடு மேற்கொண்டமை.**

காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகை முன்னால் நடைபெற்றுக்கொண்டிருந்த அமைதி வழி போராட்ட செயற்பாட்டில் ஈடுப்பட்டிருந்த நபர்களுக்குத் தாக்குதல் நடத்தி அவர்களை அச்சுறுத்துவதற்கு சதி செய்து அதற்கு உறுதுணையாக இருந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட 7 பேர்களை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி சட்டத்தரணி சேனக பெரேரா மே மாதம் 13 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: https://www.dailymirror.lk

9. **சமூக ஊடகங்களில் கருத்துகளை வெளியிட்டதற்காகத் தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டமை.**

தேசிய தொலைக்காட்சி தொகுப்பாளினி வசுந்தரா கமகே, கணினி குற்றச் சட்டத்தின் கீழ் வன்முறைக்கு உதவிய குற்றச்சாட்டில் மே 18ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: https://www.lankadeepa.lk

**10. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நீதித்துறை சுயாதீனத்துவத்திற்கு மேற்கொள்ளப்பட்ட தாக்கம் தொடர்பில் பாராளுமன்றத்தில் வெளிபடுத்தப்பட்டமை.**

போராட்டக்காரர்களுக்கு எதிரான காவல்துறையின் தடை உத்தரவை நீதிமன்றம் நிராகரித்தமையே வன்முறையைத் தடுக்க முடியாமல் போனதற்குக் காரணம் என்று தலைமை நீதிபதிக்குக் கடந்த மே 12ஆம் திகதி செயலாளர் கடிதம் அனுப்பியிருந்ததாகப் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள கடந்த மே 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேற்படி கடிதமானது நீதித்துறையின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளதாகப் பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டதுடன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் நிர்வாகச் சேவைச் சங்கம் இது தொடர்பில் அறிக்கைகளை வெளியிட்டன.

ஆதாரம்: 1. http://sinhala.adaderana.lk

2. https://lankaweb.lk

**11. "புதுன்கே ரச்தியாதுவ" என்ற தலைப்பில் புத்தகத்தை எழுதிய எழுத்தாளர் மற்றும் பதிப்பாளர்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை.**

இந்தப் புத்தகத்தின் மூலம் கௌத்தம புத்தர் மற்றும் பௌத்த மதத்தை நிந்தித்ததாகக் குற்றம்சாற்றப்பட்ட எழுத்தாளர் கே.கே. ஸ்ரீநாத் சதுரங்க மற்றும் பதிப்பாளர் உபுல் சாந்த சன்னஸ்கல ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு கடந்த மே மாதம் 20ஆம் திகதி கொழும்பு இலக்கம் 1 நீதவான் நீதிமன்றில் முதன் முதலாக விசாரணைக்கு வந்ததுடன் சந்தேகநபர்கள் தலா 50,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு செப்டம்பர் 9ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஆதாரம்: https://theleader.lk

**12. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள "ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாயம்" முன்னிலையில் ஆரம்பமாகியமை.**

கலாநிதி பாக்யசோதி சரவணமுத்து, பாஷன அபேவர்தன, சந்தியா எக்னலிகொட மற்றும் தில்ருக்ஷி ஹந்துன்நெத்தி ஆகியோர் மே 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் சாட்சியமளித்தனர். லசந்தவின் கொலைக்கு நீதி வழங்கத் தவறியதாக இலங்கை அரசுக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

ஆதாரம்: https://ptmurderofjournalists.org

**13. முகநூலில் கருத்துக்களை வெளியிட்ட காரணத்தினால் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஒருவர் ஹட்டன் பகுதியில் கைது செய்யப்பட்டமை.**

கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள்மீது அரச அனுசரணையுடன் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டமைக்கு எதிராகப் பேஸ்புக்கில் கருத்து வெளியிட்டமைக்காக ஹட்டனில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆறுமுகம் பாலசுப்ரமணியம் மே 16ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

**14. சமூக ஆர்வலர் இந்திக்க கமகே கைது செய்யப்பட்டமை.**

இலங்கை தகவல் தொழிநுட்ப நிபுணர்களின் சங்கத்தின் தலைவரும் சமூக ஆர்வலருமான இந்திக்க கமகே கடந்த மே மாதம் 27 ஆம் திகதி மாத்தளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், பல்லேகல தும்பர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆதாரம்: https://twitter.com

**15. கொழும்பில் பல வீதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை.**

"கோத்தா கோகம" போராட்டத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மே மாதம் 28ஆம் திகதி நடைப்பெறவிருந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கொழும்பில் பல வீதிகளில் பிரவேசிப்பதை தடை செய்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்தது.

ஆதாரம்: https://www.lankadeepa.lk

**16. சமூக ஊடக செயற்பாட்டாளரும் சமூக ஆர்வலருமான ரத்திந்து சேனாரத்ன (ரெட்டா) கைது செய்யப்பட்டமை.**

"கோதாகோகம" போராட்டத்தில் முன்னணி செயற்பாட்டாளரான இவர், மே மாதம் 25 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பாதையை இடையூறு செய்தார் மற்றும் காவல்துறையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் மே மாதம் 30 ஆம் திகதி கொம்பனித்தெரு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். குறித்த குற்றச்சாட்டுகளுக்குப் பொலிஸ் பிணை வழங்க முடியும் என்பதனை அவரின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியதனை தொடர்ந்து, அதன்படி பொலிஸார் கையொப்பமிட்டு அவரை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆதாரம்: 1. https://www.youtube.com

2. https://mawbima.lk

**17. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களான மூன்று பிக்குகள் வீரகெட்டிய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டமை.**

வீரகெட்டியவில் இடம்பெற்ற கலவரத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி வீரகெட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வேகதவள ராகுல, தெவலேகம பேமரத்தன மற்றும் வக்கமுல்ல உதித பிக்குகள் வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் கடந்த 31ம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு ஒக்டோபர் 4ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: 1. https://www.youtube.com

2. https://www.aithiya.lk

18. **முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டமை.**

அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ரமேஷ் பத்திரன ஆகியோர் அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடல் மைதானம்மீதான தாக்குதல் சம்பந்தமான விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக ஜூன் 01ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://island.lk

19. **18 வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் நினைவேந்தல்.**

2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி அரச அனுசரணையுடன் துணைப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மூன்று இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ச் சங்கம் இணைந்து மே 31ஆம் திகதி மட்டக்களப்பு காந்தி பூங்காவிலும், முல்லைத்தீவு ஊடகவியலாளர் சங்கம் முல்லைத்தீவிலும், மே 29ஆம் திகதி யாழ். ஊடக சமூகம் யாழ்ப்பாணத்திலும் நினைவேந்தல்கள் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதாரம்: 1. https://twitter.com

2. https://twitter.com

3. https://twitter.com

## ஊடக சுயாதீனத்துவம்

**ஊடக சுயாதீனத்துவ ஆக்கக்கூறின், ஊடகவியலாளர்கள் ஊடகத்தின் உள்ளடக்கத்தைத் தீர்மானிக்கும் உரிமையில் வெளி தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும் செல்வாக்கு உள்ளடங்குகின்றது. ஊடக உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் அழுத்தமும் இதின் உள்ளடங்கும். "நிகழ்ச்சிகளுக்கு அரசியல்வாதிகளை ஈடுபடுத்துவதில்லை" என்ற ஊடக உரிமையாளர்கள் தீர்மானித்துள்ள முடிவு தெளிவாக உரிமையாளர்களினால் ஊடகவியலாளர்களுக்குக் காணப்படும் உரிமையைக் கைப்பற்றும் செயற்பாடாகும். மேற்கூறிய சம்பவம் "தொழில்சார் நிபுணத்துவம்" என்ற ஆக்ககூறின் கீழ் உள்ளடங்கும் "சுய தணிக்கை" மற்றும் "தன்னுடைய பணிப் தொடர்பில் ஊடகவியலாளருக்குக் காணப்படும் அறிவு" என்ற குறிகாட்டியின் கீழும் "ஊடக தயாரிப்புகளின் பன்முகத்தன்மை மற்றும் தரம்" என்ற ஆக்ககூறிற்கு உரித்தான "ஊடகத்திற்குள் அனைத்து கருத்துக்கள் மற்றும் ஆதாரங்களின் பிரதிநிதித்துவம்" என்ற குறிகாட்டியின் கீழும் கருத்தில்கொள்ள முடியும்.**

**அட்டவணை 04 – 2022 மே : ஊடக சுயாதீனத்துவம்– 01 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஊடக நிறுவனத்தில் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் ஒருமித்த கருத்து எட்டப்படாவிட்டால் அவர்களை ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்குவதை தவிர்க்குமாறு இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்களின் சங்கம் வேண்டியுள்ளது.**

குறித்த சங்கம் மே 4ஆம் திகதி இலங்கை மன்றம் நிறுவனத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்ததுடன், தற்போதைக்கு ஒரு அங்கத்தவ நிறுவனம், தமது அலைவரிசை நிகழ்சிகளுக்கு எந்தவொரு அரசியல்வாதிகளையும் ஈடுபடுத்துவதில்லை என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் அங்குக் குறிப்பிடப்பட்டது. இந்த நிலைப்பாட்டை விமர்சித்துள்ள ஊடக ஆய்வாளர் விஜயானந்த ஜயவீர, ஊடக உரிமையாளர்களால் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பது மற்றும் தணிக்கை விதிக்கப்படுவது ஊடக சுதந்திரத்தையும் பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையையும் மீறும் நடவடிக்கையெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதாரம்: 1 https://www.youtube.com

2. https://www.facebook.com

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் 3 சம்பவங்கள் மே மாதத்தில் அவதானிக்கப்பட்டது**

**அட்டவணை 05–2022 மே கட்டமைப்புரீதியான விதிமுறைகள் –03 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 03 |
| **மொத்தம்** | **03** |

1. **அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின்போது சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுவதனை கண்டித்து UNICEF அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளமை.**

   குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும், அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள்குறித்துதங்கள்கருத்துக்களைவெளிப்படுத்துவதற்கும் உரிமை காணப்படுவதுடன், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் காணப்படுகின்றது என்பதனை அந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. சிறு குழந்தைகள் கூடக் கண்ணீர் புகைக்குண்டுக்கு உட்படுத்தப்பட்ட சமீபத்திய போராட்டங்களை அடுத்து மே 7 அன்று UNICEF இவ் அறிக்கையை வெளியிட்டது.

   ஆதாரம்: https://www.unicef.org

2. **மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்தைப் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியமை.**

   இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைகுறித்து பாப்பரசர் மே 11ஆம் திகதி விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பின்வருமாறு தெரிவித்துள்ளார் "மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்கவும், மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளுக்கான முழு மரியாதையை உறுதிப்படுத்தவும் அனைத்து பொறுப்புள்ள தரப்பினரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்." நாட்டின் சமூக, பொருளாதார சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சமீபகாலமாகக் குரல் எழுப்பும் இளைஞர்களை இங்கு நினைவுகூர்வதுடன் வன்முறையில் ஈடுபடாமல் அமைதிக்காக அனைத்து தரப்பினரும் பாடுபட வேண்டும் என அந்த அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

   ஆதாரம்: https://www.vaticannews.va

3. **"கோடாகோகம" போராட்டத் தளத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு நீதி கோரி இரு அமைப்புக்கள் பொலிஸ் மா அதிபரிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளன.**

   இளம் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் ஆகியவை மே 15 ஆம் திகதி அன்று பொலிஸ் தலைமையகத்தில் மகஜர் ஒன்றை கையளித்ததுடன், விசாரணைகள் மேற்கொள்ளப்படும் முறை பக்கச்சார்பானதாகவும் மற்றும் நம்பகத்தன்மையற்றதாகவும் காணப்படுகின்றது என்பதனை இந்தக் கடிதம் விமர்சன ரீதியாக முன்வைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இக்குற்றத்தில் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதால் அவர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

   ஆதாரம்: https://www.bbc.com

**அட்டவணை 6 : ஊடக சுதந்திரம் : 2022 ஜனவரி முதல் மே வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–ஏப்ரல் | | 2022 மே |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 16 | | 12 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 11 | 07 | 19 |
| ஊடக சுயாதீனத்துவம் | 03 | | 01 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 02 | | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 07 | 01 | 03 |
| **மொத்தம்** | **39** | | **35** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25